P2-A

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | க.பொ.த. சாதாரண தரம் | **2022 (2023)**

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper | முன்னோடி வினாப்பத்திரம்

# Drama & Theatre

# நாடகமும் அரங்கியலும்



**Answer Sheet - I, II** | விடைத்தாள் - I, II (மொழிமூலம்–தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | கலைப்பிரிவு

## பத்திரம் - I - விடைப்பத்திரம்

| வினா இல. | விடை இல | வினா இல. | விடை இல | வினா இல | விடை இல | வினா இல. | விடை இல |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 3 | 31. | 1 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 4 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 2 | 33. | 1 |
| 04. | 4 | 14. | 3 | 24. | 3 | 34. | 4 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 4 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 2 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 1 | 37. | 4 |
| 08. | 4 | 18. | 2 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 2 | 30. | 2 | 40. | 1 |

## நாடகமும் அரங்கியலும் - II (விடைப்பத்திரம்)

**1.**

i) நாடகம் (01 புள்ளி)
ii) குரல்வழிச் சித்திரிப்பு (01 புள்ளி)
iii) இசை நாடகம் (பூதத்தம்பி) (01 புள்ளி)
iv) 1993 (01 புள்ளி)
v) வாச்சிக அபிநயம் (01 புள்ளி)
vi) அம்பா பாடல் (01 புள்ளி)
vii) முத்துமாரியம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையது. (01 புள்ளி)
viii) மஹாகவி து. உருத்திரமூர்த்தி (01 புள்ளி)
ix) கதிரை, நிலைக்கண்ணாடி, தையல் இயந்திரம், மேசை (02 புள்ளிகள்)
x) கதை காணப்படும் (02 புள்ளிகள்)
கரு காணப்படும்
பாத்திரங்கள் காணப்படும்

2.

i)

* காட்சி விதானிப்பாளர்
* ஒளி விதானிப்பாளர்
* இசை விதானிப்பாளர்
* ஓலி விதானிப்பாளர்
* வேட உடை, ஒப்பனையாளர்

(இவ்வாறு ஏனைய பொருத்தமான கலைஞர்கள் மூவரைக் குறிப்பிட்டாலும் புள்ளி வழங்கலாம்.)

(03 புள்ளிகள்)

ii)

* செயல் நிலைக்குறிப்பு
* நேரக்குறிப்பு
* காட்சிக் விதானிப்பு பற்றிய குறிப்பு
* இசை பற்றிய குறிப்பு
* ஓளிவிதானிப்பு பற்றிய குறிப்பு (04 புள்ளிகள்)

iii)

* நடிகர் பாத்திரத்துடன் ஒன்றிக்க உதவுதல்.
* நடிகனது செயலியக்கத்திற்கு வலச் சேர்த்தல்.
* பாத்திரத்தின் பௌதிகவியல் சார்ந்த அழகியலைப் பேணுதல்.
* பாத்திரம் சார்ந்த நம்பகத்தன்மையைப் பார்ப்போரிடத்தில் ஏற்படுத்துதல்.
* ஒருவர் பல பாத்திரங்களை ஏற்று நடிப்பதற்கு உதவுதல்.
* பாத்திரத்தின் வயது, அந்தஸ்து போன்றவற்றைப் பார்வையாளர் அறிவதற்கு

(05 புள்ளிகள்)

3.

i) அரங்கிற்குரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தி நடிகரின் திறன் விருத்தியைத் தூண்டுவதுடன் உடல், உள, குரல் பயிற்சியாகவும் நடிப்பதற்குத் தயார்படுத்த உதவும் விளையாட்டுக்கள் அரங்க விளையாட்டுக்கள் எனப்படும்.

(03 புள்ளிகள்)

ii)

* கற்பனைத் திறன்
* கணப்பொழுதில் தீர்மானம் எடுக்கும் திறன்
* தொடர்பாடல் திறன்
* மனதை ஒரு நிலைப்படுத்தும் திறன்
* தலைமைத்துவத் திறன் (04 புள்ளிகள்)

iii)

* அரங்கப் பயிற்சிகள் உடற்பயிற்சி, உளப்பயிற்சி, குரற் பயிற்சி, அரங்க விளையாட்டுக்கள், புதிதளித்தல்,ஊமம் போன்ற பயிற்சிகள்.
* உடல் பயிற்சி - நடிகரது உடல் எத்தகைய சித்திரிப்புக்கும் தயாராக இருத்தல்.
* உளம் சார் பயிற்சி – பாத்திரச் சொல்லாடல்கள், செயலியக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்கும், பாத்திர உணர்ச்சியில் பயணிப்பதற்கும் உதவுதல்.
* குரல் பயிற்சி – நடிகரது குரலை முனைப்புறுத்துவதற்கும் சொல்லாடல்களைப் புறத்தெறிவதற்கும், வீச்சு, ஏற்ற இறக்கம், சுருதி போன்றவற்றைக் கையாளுதல்.
* அரங்க விளையாட்டு – உடல் உளத்தளர்வு நிலை
* புதிதளித்தல் - கற்பனை மற்றும் புதுமை போன்றவற்றை இணைத்துப் படைப்பாக்கம் செய்தல்.
* ஊமம் - உடல் மொழி மூலமான செயற்பாடுகள் அதிகம் பயன்படுத்தல்.

போன்ற விடயங்கள் விளக்கப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கலாம். (05 புள்ளிகள்)

4.

i) ஷங்கரி, ஷீலா, அம்பிகை, ரஜீவ் (04 புள்ளிகள்)

ii)

| ஷங்கரி | அம்பிகை |
|---|---|
| தனக்குரிய வேளைகளைத் தானே செய்யவேண்டும் என்ற விருப்பம் உடையவள் | தனக்குரிய வேலைகளை மற்றவர்கள் தனக்குச் செய்து தர வேண்டும் என எண்ணுபவள். |
| பெற்றோரைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்பவள். | பெற்றோரின் எண்ணங்களைத் தன் மனதில் உள்வாங்காதவள். |
| நிதானமாகப் பேசுபவள் | வெடுக்கென்று பேசுபவள் |

மேலும் பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

(04 புள்ளிகள்)

iii)

* காட்சி மாற்றத்திற்கு உதவுதல்
* பாத்திரத்தில் உணர்வுடன் ஒன்றித்தல்
* ஆலோசனை கூறுதல்
* சூழமைவுக்குப் பொருத்தமான பாடல்களைப் பாடுதல்
* காட்சிகளை இணைத்தல்
* பாத்திரங்களாகப் பேசுதல் (04 புள்ளிகள்)

5.

i)

* பார்ஸி நாடக மரபு
* ஸ்பெஷல் நாடகம்
* அண்ணாவி மரபு நாடகம்
* கொட்டகைக் கூத்து (04 புள்ளிகள்)

ii)

* பாடுதலையும் நடித்தலையும் முதன்மையாகக் கொண்டது.
* கர்நாடக இசையினைப் பிரதான இசைமரபாகக் கொண்டது.
* நடிகரின் சாரீர வளமே (குரல்) இதன் மூலதனமாகும்.
* சுருதி, தாளம், இராகம், பாவம் போன்ற வளத்தைக் கொண்டவர்கள் இம்மரபினைச் சிறப்பாக நிகழ்த்த முடியும்.
* பலவகை ரஸங்களையும் இசை மெட்டுக்களையும் கொண்டது.
* படச்சட்ட மேடையில் வர்ணம் தீட்டப்பட்ட காட்சித்திரைகளை பின்னணியாகக் கொண்டிருக்கும். (04 புள்ளிகள்)

iii)

- பெண் பாத்திரங்களைச் சிறப்பாகச் சித்திரிக்கக் கூடியவர்.
- சுபத்திரை பாத்திரத்தைச் சிறப்பாகத் தாங்கியமையினால் சுபத்திரை ஆழ்வார் எனவும், கிருஷ்ணன் பாத்திரத்தை ஏற்றமையால் கிருஷ்ணரழ்வார் எனவும் சிறப்பிக்கப்பட்டவர்.
- மேடையிலே பாடல்கள் இயற்றிப் பாடும் திறன் கொண்டவர்.
- இந்தியா, மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று நாடகம் நடித்துப் புகழ் பெற்றவர்.

(04 புள்ளிகள்)

6.

i)

- கலையரசு க. சொர்ணலிங்கம்
- பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
- குழந்தை ம. சண்முகலிங்கம்
- பேராசிரியர் சி. மௌனகுரு
- கலாநிதி க. சிதம்பரநாதன்
- நா. சுந்தரலிங்கம்
- அ. தாசீசியஸ்
- க. பாலேந்திரா

( இவர்களில் எவரேனும் மூவரைக் குறிப்பிட்டால் 03 புள்ளிகள்)

ii)

மேலே குறிப்பிட்டவர்களின் படைப்புக்களைக் குறிப்பிட்டிருப்பின் புள்ளிகள் வழங்குக.

(03 புள்ளிகள்)

iii)

- நடிகருக்குரிய ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டது.
- அரங்க ஒளியமைப்பைக் காத்திரமாகப் பயன்படுத்தும் மரபு உருவாகியது.
- சமகாலப் பிரச்சினைகள் அரங்கில் கொண்டு வரப்பட்டது.
- புதிய அரங்க நுட்பங்கள் அறிமகமாகியது.
- ரசிகர் அவை உருவாக்கப் பெற்றது.
- அரங்க நிறுவனங்களின் தொழிற்பாடுகள் செழுமை அடைந்தது.
- பார்வையாளர்களை நோக்கி அரங்கு சென்றமை. (06 புள்ளிகள்)

7.

i) ரட்டயகும

- சிங்கள மக்களால் மேற்கொள்ளப்படும் சடங்கு
- சுகப்பிரசவம், குழந்தை வரம் வேண்டிச் செய்யப்படுவது.
- ஏழு மலட்டு ராணிகளின் கதை செய்து காட்டப் பெறுதல்
- பூங்குடிலை அரங்கவெளியாகக் கொண்டிருக்கும். (04 புள்ளிகள்)

ii) வேட்டைத் திருவிழா

- இந்து ஆலயங்களில் நடைபெறும் சடங்கு ஆகும்.
- முருகன், சிவன் கோயில்களில் நடைபெறும்.
- கோயில் வீதியில் வேட்டை நிகழ்வு நடைபெறும்.
- எமது முன்னோர்களின் வாழ்வினைச் சித்திரிக்கும் சடங்கு.
- பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபாடு கொண்டதாகக் காணப்படும். (04 புள்ளிகள்)

iii) நெறியாளர்

- நாடக எழுத்துரு ஒன்றை ஆற்றுகையாக மாற்றுபவர்.
- நடிகர் தெரிவு முதல் ஆற்றுகை வரை வழிநடத்திச் செல்பவர்.
- அரங்க மூலகங்களுடன் இணைப்பாக்கம் செய்பவர்.
- இவருக்கு முகாமைத்துவத் திறன், தொடர்பாடல் திறன் போன்ற திறன்களுடன் அழகியற் பண்பு, விமர்சன நோக்கு என்பனவும் காணப்பட வேண்டும். (04 புள்ளிகள்)

iv) வில்லுப்பாட்டு

- வில்லிசை கொண்டு கதை கூறப்படும்.
- இதில் பாடல் அபிநயம் இடம்பெறும்.
- இதில் பெரும்பாலும் 5 பேர் காணப்படுவர்.
- கடம், ஆர்மோனியம், தாளம் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படும்.
- இதற்கு புகழ்பூத்தவராகச் சின்னமணியைக் குறிப்பிடலாம். (04 புள்ளிகள்)

v) வசந்தன் கூத்து

- மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் ஆடப்படும்.
- வசந்த காலத்தில் ஆடப்படுவதால் வசந்தன் கூத்து எனப் பெயர் பெற்றது.
- இரண்டு அடி கோல்களைத் தட்டியவாறு 6 அன்றேல் 8 அன்றேல் 12 பேர் ஆடுவர்.
- தென்மோடிக்குரிய ஆடற்கோலங்கள் காணப்படும். (04 புள்ளிகள்)